RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 224 | ஆகஸ்டு.16 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சிறப்பான புலன் விசாரணை மற்றும் அர்ப்பணிப்புடன் பணி: 15 காவல்துறை அதிகாரிகளுக்கு சிறப்பு பதக்கம்



சென்னை, ஆக.16-

சுதந்திர தினத்தை முன்னிட்டு 15 காவல்துறை அதிகாரிகளுக்கு தமிழக அரசு சிறப்பு பதக்கங்களை அறிவித்துள்ளது. இது தொடர்பாக, உள்துறை செயலர் தீரஜ் குமார் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: புலன் விசாரணைப் பணியில் மிகச் சிறப்பாக பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் 10 காவல் துறை அதிகாரிகள், 2025ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு, தமிழக முதல்வரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணிப் பதக்கங்கள் வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரம்: சென்னை குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, சைபர் கிரைம் செல் பிரிவு, காவல் துணை கண் காணிப்பாளர் பூரணி, திருநெல்வேலி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, காவல் ஆய்வாளர் உலகராணி, சென்னை குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, கடத்தல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளர் லதா, சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் செந்தில் குமார், தஞ்சாவூர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை துணை காவல் கண்காணிப்பாளர் கல்பனாதத், திண்டுக்கல் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, காவல் ஆய்வாளர் சந்தானலட்சுமி, திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் வசந்தகுமார், திருப்பூர் மாநகரம், வடக்கு காவல் நிலைய, காவல் ஆய்வாளர் ஜெகநாதன், அரியலூர், குற்றப் புலனாய்வுத் துறை, காவல் ஆய்வாளர் திலகாதேவி, நாகப்பட்டினம், குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, காவல் ஆய்வாளர் புவனேஸ்வரி. இதே போன்று, பொதுமக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய 5 காவல் துறை அதிகாரிகளுக்கு, 2025ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள் வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதன்படி, சிறைத்துறை கூடுதல் டிஜிபி மஹேஷ்வர் தயாள், நுண்ணறிவு பிரிவு (உள்நாட்டு பாதுகாப்பு ) டிஜஜி மகேஷ், திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், சென்னை தலைமையக தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பிரவின்குமார், சென்னை காவல் ஆய்வாளர் மேரிரஜு ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா 8 கிராம் தங்கப் பதக்கமும், ரூ.25 ஆயிரம் ரொக்கப் பரிசும் வழங்கப்படும். இந்த விருதுகள் முதல்வரால் மற்றொரு விழாவில் வழங்கப்படும்.








■ சிவகங்கை மாவட்டம் இலுப்பைகுடியில் 79 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு இந்தோ திபெத் எல்லை பாதுகாப்புப் படை **(ITBP),** துணை இராணுவ பயிற்சி மையம், **RTC,** சிவகங்கை படைவீரகள் அனைவரும் இணைந்து மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனங்களில் தேசிய கொடியை ஏந்தியபடி , இலுப்பைகுடி கிராமத்திலிருந்து அரசனூர் கிராமம் வரை பயணம் மேற்கொண்டனர். இதன் நோக்கம் ஆகஸ்ட் 15ம் நாள் மக்களிடையே "வீட்டுக்கு வீடு மூவர்ண கொடி" **(Gar Ghar Tiranga)** ஏற்ற வேண்டும், மற்றும் முவர்ண கொடியின் மகத்துத்தை பற்றி எடுத்து கூறி, நம் நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயர்க ளை எதிர்த்து போராடி உயிர்த் தியாகம் செய்த தியாகிகளை நினைவு கொள்ள வேன்டும் எனவும் எடுத்துரைத்தனர். மேலும் மக்களிடையே தேசபற்று மென் மேலும் அதிகரிக்க வேண்டும் எனவும் எடுத்துரைத்தனர். இருசக்கர வண்டி ரேலி இருகிராமங்களிடையே மிக சிறப்பாக நடைபெற்றது.

# "அணு ஆயுத மிரட்டலை இனி பொறுத்துக்கொள்ள மாட்டோம்"

## சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி உறுதி



புதுடெல்லி: ஆக.16-

"நமது ஆயுதப் படைகளால் பாகிஸ்தானில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. அணு ஆயுத அச்சுறுத்தல்களை இனி பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்று இந்தியா முடிவு செய்துள்ளது. எந்த மிரட்டலுக்கும் நாம் அடிபணிய மாட்டோம்" என்று சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி கூறினார்.

நாடு முழுவதும் 79வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. தலைநகர் டெல்லியில் அமைந்துள்ள செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசிய கொடியேற்றினார். தொடர்ந்து 12வது முறையாக செங்கோட்டையில் தேசிய கொடியை அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், "என் அன்பான இந்திய குடிமக்களே, இந்த சுதந்திர தின விழா பெருமை மற்றும் மகிழ்ச்சி நிறைந்த தருணம் ஆகும். இது 140 கோடி மக்களின் கொண்டாட்டம்.

பாலைவனங்களாக இருந்தாலும் சரி, இமயமலையின் சிகரங்களாக இருந்தாலும் சரி, கடலின் கரைகளாக இருந்தாலும் சரி, பரபரப்பான நகரங்களாக இருந்தாலும் சரி, நாடு முழுவதும் ஒரே குரல் ஒலிக்கிறது: நாம் அனைவரும் இந்தியாவை நம் உயிருக்கும் மேலாக நேசிக்கிறோம். 1947ம் ஆண்டு, எல்லையற்ற சாத்தியக்கூறுகளுடனும், எண்ணற்ற ஆயுதங்களின் வலிமையுடனும், நமது நாடு சுதந்திரம் பெற்றது. ஆனால் சவால்கள் இன்னும் அதிகமாக இருந்தன.

மதிப்புக்குரிய மகாத்மாவின் கொள்கைகளைப் பின்பற்றி, அரசியலமைப்புச் சபை உறுப்பினர்கள் ஒரு மிக முக்கியமான பொறுப்பை நிறைவேற்றினர். கடந்த 75 ஆண்டுகளாக, இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் ஒரு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக நின்று, நமது பாதையை ஒளிரச் செய்து வருகிறது,

இந்த சுதந்திர தினத்துக்காக செங்கோட்டையில் கூடியிருக்கும் 'மினி இந்தியா'வை நான் காண்கிறேன். நமது துணிச்சலான வீரர்களின் வீரத்துக்கு நான் தலை வணங்குகிறேன். ஆபரேஷன் சிந்தூர் மூலம், நமது வீரர்கள், எதிரிகளை கற்பனைக்கு அப்பாற்பட்ட பலத்துடன் பதிலளித்தனர். ஏப்ரல் 22ம் தேதி, எல்லை தாண்டி வந்த பயங்கரவாதிகள், அப்பாவி பொதுமக்களை அவர்களின் மதத்தை கேட்ட பிறகு கொன்றனர். இதனால் முழு தேசமும் கோபமடைந்தது.

அணு ஆயுத மிரட்டல் நீண்ட காலமாகத் தொடர்கிறது. ஆனால், அது இனி பொறுத்துக் கொள்ளப்படாது. நமது எதிரிகள் இதுபோன்ற முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டால், நமது ஆயுதப் படைகள் தங்கள் விருப்பப்படி, அவர்கள் விரும்பும் நேரத்தில், அவர்கள் நிர்ணயித்த இலக்குகளை அடைவதன் மூலம் பதிலடி கொடுக்கும். பொருத்தமான பதிலடி கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

நமது ஆயுதப் படைகளால் பாகிஸ்தானில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. ஒவ்வொரு நாளும் புதிய தகவல்கள் வெளியாகி வருகின்றன. அணு ஆயுத அச்சுறுத்தல்களை இனி பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்று இந்தியா முடிவு செய்துள்ளது. எந்த மிரட்டலுக்கும் நாம் அடிபணிய மாட்டோம்.

கடந்த சில நாட்களாக, இயற்கை பேரழிவுகள், நிலச்சரிவுகள், மேகவெடிப்புகள் மற்றும் பல பேரிடர்களை நாம் சந்தித்து வருகிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபங்கள். மீட்பு நடவடிக்கைகள், நிவாரண முயற்சிகள் மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் மாநில அரசுகளும் மத்திய அரசும் முழு பலத்துடன் இணைந்து செயல்படுகின்றன" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

## விடுதலை போராட்ட தியாகிகள் ஓய்வூதியம் உயர்வு: சுதந்திர தின உரையில் முதல்வர் ஸ்டாலின் 9 அறிவிப்புகள்





சென்னை: ஆக.16-

விடுதலை போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.22,000 என உயர்த்தி வழங்கப்படும் என்பன உள்ளிட்ட 9 அறிவிப்புகளை சுதந்திர தின உரையில் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

79வது சுதந்திர தினம் நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் தலைநகரான சென்னையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை இன்று ஏற்றி, கொடி வணக்கம் செலுத்தினார். பின்னர் பல்வேறு விருதுகளை வழங்கினார். இதனையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நாட்டு மக்களுக்கு சுதந்திர தின சிறப்புரை ஆற்றினார். அதில் இடம்பெற்ற 9 முக்கிய அறிவிப்புகள்:

› விடுதலை போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.22,000 என உயர்த்தி வழங்கப்படும்.

› விடுதலை போராட்ட தியாகிகளின் குடும்பத்தினருக்கான மாதாந்திர ஓய்வூதியம் ரூ.12,000 என உயர்த்தப்படும்.

› கட்டபொம்மன், வ.உ.சி ஆகியோரின் வழிந்தோன்றளுக்கு நிதி உதவி ரூ.11,000 என உயர்த்தி வழங்கப்படும்.

› 2ம் உலகப் போரில் பங்கேற்ற தமிழகத்தை சேர்ந்த வீரர்களுக்கு மாதாந்திர நிதி உதவி ரூ.15,000 என உயர்த்தி வழங்கப்படும்.

› 2ம் உலகப் போரில் பங்கேற்ற வீரர்களின் கைம்பெண்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் நிதி ரூ.8,000 என உயர்த்தி வழங்கப்படும்.

› முன்னாள் படை வீரர்களின் வசதிக்காக சென்னை மாதவரத்தில் 33,000 சதுர அடி பரப்பில் ரூ.22 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதியுடன் கூடிய தங்கும் விடுதி அமைக்கப்படும்.

› மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம், மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவு செய்யப்படும்.

› ஓட்டுநர் பயிற்சி பெற மாநில அளவில் ஒரு பயிற்சி மையம், மண்டல அளவில் இரண்டு பயிற்சி மையங்கள், மாவட்ட அளவில் ஒரு ஓட்டுநர் பயிற்சி பள்ளி தொடங்கப்படும்.

› தமிழ்நாடு கட்டுமான நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் கல்லூரியில் படிக்கும் போது திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும். இந்த 9 அறிவிப்புகளும் விரைவில் செயல்படுத்தப்படும்" என முதல்வர் அறிவித்தார்.

## பிஹார் வாக்காளர் பட்டியலில் இருந்து 65 லட்சம் வாக்காளர் நீக்கப்பட்ட விவகாரம்: தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஆக.16-

பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, கடந்த 1ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் உயிரிழந்த மற்றும் நிரந்தரமாக புலம் பெயர்ந்த 65 லட்சம் வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், ஏடிஆர் தொண்டு நிறுவனம் உட்பட பல்வேறு தரப்பினர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் 11 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் நீதிபதிகள் சூர்ய காந்த் மற்றும் ஜாய்மாலா பாக்சி அமர்வு முன்பு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியதாவது: பிஹார் வாக்காளர் பட்டியலில் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. இதில் 22 லட்சம் பேர் இறந்து விட்டதாக தேர்தல் ஆணையம் கூறுகிறது. அப்படியானால் இந்த தகவல் பூத் மட்டத்தில் தெரிவிக்காதது ஏன்? எனவே, நீக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர் மற்றும் அவர்களை நீக்கியதற்கான காரணத்தை வரும் 19ம் தேதிக்குள் தேர்தல் ஆணைய இணையதளத்தில் வெளியிட வேண்டும். அப்போதுதான் நீக்கப்பட்ட ஒவ்வொரு வாக்காளரும் காரணத்தை தெரிந்து கொள்ள முடியும்.

மேலும் பட்டியலில் இருந்து தங்கள் பெயர் தவறாக நீக்கப்பட்டதாக கருதும் வாக்காளர்கள், ஆதார் அட்டை நகலுடன் தேர்தல் ஆணையத்தில் புகார் தெரிவிக்கலாம். இது தொடர்பான தகவலை அதிகம் விற்பனையாகும் பிராந்திய மொழி நாளிதழில் தெரிவிக்க வேண்டும். தூர்தர்ஷன் உள்ளிட்ட முன்னணி செய்தித் தொலக்காட்சிகளிலும் செய்தி வெளியிட வேண்டும். மாவட்ட தேர்தல் அதிகாரியின் சமூக ஊடக பக்கத்திலும் இது பற்றிய அறிவிப்பை வெளியிட வேண்டும். இதுதவிர, பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர் (அதற்கான காரணங்களுடன்) பட்டியலை சம்பந்தப்பட்ட கிராம பஞ்சாயத்து அலுவலகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக தகவல் பலகையிலும் வெளியிட வேண்டும்.

மேலும் வாக்காளர்கள் தங்கள் இபிஜசி எண்ணை தேர்தல் ஆணைய இணையதளத்தில் உள்ளீடு செய்து நிலவரத்தை தெரிந்து கொள்வதற்கான வசதியையும் செய்ய வேண்டும். இந்த வழக்கின் அடுத்த விசாரணை வரும் 22ம் தேதி நடைபெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை ஏற்றுக் கொள்வதாக தேர்தல் ஆணையம் நீதிமன்றத்தில் தெரிவித்தது. வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின்போது ஆதார் அட்டையை ஆவணமாக கருத முடியாது என தேர்தல் ஆணையம் கூறியிருந்த நிலையில், அதை ஆவணமாக சமர்ப்பிக்கலாம் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டுச் சங்கமும் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரியும் இணைந்து நடத்திய

# 4வது மாநில இளையோர் மற்றும் துணை இளையோருக்கான பாரா தடகள விளையாட்டுப் போட்டிகள்








காரைக்குடி, ஆக.16-
தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டுச் சங்கமும் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரியும் இணைந்து நடத்திய 4வது மாநில இளையோர் மற்றும் துணை இளையோருக்கான பாரா தடகள விளையாட்டுப் போட்டிகள் 11.08.25 மற்றும் 12.08.25 ஆகிய தேதிகளில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியானது இந்திய பாராலிம்பிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் ஆதரிக்கப்படுகிறது.

இந்தத் தடகள விளையாட்டுப் போட்டியானது மாநிலம் முழுவதும் உள்ள இளையோர் மாற்றுத் திறனாளி வீரர்களிடையே விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இப்போட்டியின் நிறைவு விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேரா.க.ரவி அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில், பாரா தடகள வீரர்களின் உறுதியையும் திறமை யையும் பாராட்டிப் பேசியதுடன் தன்னம்பிக்கை மற்றும் மீள் தன்மையை வளர்ப்பதில் விளையாட்டுகளின் பங்கு குறித்து எடுத்துரைத்தார். மேலும், அழகப்பா பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள் குறித்தும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

மேலும் இவ்விழாவில், அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர், பேராசிரியர் அ.செந்தில்ராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் மு.சுந்தர் அவர்கள் போட்டி இயக்குநராகவும் பங்கேற்றனர்.

தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் பொறியாளர் ஆர்.சந்திரசேகர்,; பொதுச் செயலாளர் கிருபாகர ராஜா, இந்தியப் பாரா தடகளப் பயிற்சியாளரும் தயான்சந்த் விருதாளருமாகிய பி.ரஞ்சித்குமார், சர்வதேச தங்கப்பதக்கம் வென்ற வீரர் ஜி.விஜயசாரதி, அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் சி.வைரவசுந்தரம் மற்றும் உதவிப் பயிற்றுநர் முனைவர் த.பாண்டிசெல்வி ஆகியோர் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

இப்போட்டியில் தமிழ்நாடு முழுவதிலிருந்து ஏறத்தாழ 500 மாற்றுத் திறனாளி இளையோர்கள் உற்சாகத்துடன் பங்கு பெற்றனர். போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற வீரர்களுக்கு துணை வேந்தர் பேரா.க.ரவி அவர்கள் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கினர்.




■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.ஆர்.ஸ்டாலின், இ.கா.ப., அவர்கள் ஆகியோர் நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற 79வது சுதந்திரதின விழாவில் கோட்டார் கவிமணி அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சியை கண்டுகளித்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.பாலசுப்பிரமணியம், மாவட்ட வன அலுவலர் திரு.பிராசாந்த், இ.வ.ப., நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப., திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திரு.மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.கு.சுகிதா, உட்பட பலர் உள்ளார்கள்.

# சுதந்திர தினவிழாவில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, 10 பயனாளிகளுக்கு ரூபாய் 4 இலட்சத்து 22 ஆயிரம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வழங்கினார்



சிவகங்கை, ஆக.16-
சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மைதானத்தில், நடைபெற்ற சுதந்திர தினவிழா நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து, சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், பின்னர், சமாதானத்தை விளக்கும் வகையில், வெண்புறாக்களையும், மூவர்ண பலூன்களையும் பறக்கவிட்டார். அதனைத் தொடர்ந்து, காவல்துறை, ஊர்க்காவல்படை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இவ்விழாவில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூபாய் 6,359/ வீதம் மொத்தம் ரூபாய் 12,718/ மதிப்பீட்டிலான மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களையும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 25,000/ வீதம் மொத்தம் ரூபாய் 75,000/ மதிப்பீட்டிலான தொகுப்பு நிதி கல்வி உதவித்தொகைக்கான ஆணையினையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் 20252026ன் கீழ் ரூபாய் 1,25,000/ மதிப்பீட்டில் வெங்காய சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கான ஆணையினையும்,

4 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 52,500/ மதிப்பீட்டில் பண்ணைக்குட்டை அமைப்பதற்கான ஆணையினையும் என ஆக மொத்தம் 10 பயனாளிகளுக்கு ரூபாய் 4,22,718/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும், 70 காவல்துறையைச் சார்ந்த காவலர்களுக்கும், வருவாய்த்துறை மற்றும் பல்வேறுத்துறைகளில் சிறப்பாக பணிபுரிந்த 300 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நற்சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டிலான பரிசுத்தொகையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிலம்பாட்டம், யோகா மற்றும் கராத்தே உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ரா.சிவ பிரசாத்,இ.கா.ப., அவர்கள், சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் திரு.பிஆர்.செந்தில்நாதன் அவர்கள், தேவகோட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.மு.முத்துகழுவன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.விஜயகுமார் மற்றும் அனைத்துத்துறை அரசு முதல்நிலை அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கோரும் மனு மீது பதில் அளிக்க வேண்டும்:

## மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஆக.16-
ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க உத்தரவிடக் கோரும் மனு மீது மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வகை செய்யும், அரசியல் சாசனத்தின் 370வது சட்டப் பிரிவை மத்திய அரசு கடந்த 2019ம் ஆண்டு ரத்து செய்தது. இதையடுத்து,அம்மாநிலம் ஜம்முகாஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டன.

மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே தள்ளுபடி செய்தது. இந்நிலையில், ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க உத்தரவிடக் கோரி கல்வியாளர் ஜாஹூர் அகமது பட் மற்றும் சமூக அரசியல் ஆர்வலர் அகமது மாலிக் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதி கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கோபல் சங்கரநாராயணன், இந்த மனுவை விரைவாக விசாரிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, “ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்குவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது” என்றார்.

இதையடுத்து, இந்த மனு மீது விரிவான பதில் மனுவை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் இந்த வழக்கின் மீதான விசாரணையை 8 வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.




# தாம்பரம் கிக்ஸ் ஆண்ட் பஞ்சஜ் கராத்தே அகடாமி சார்பில் பெங்களூரில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் தங்கம் வென்று சாதனை

தாம்பரம், ஆக.16-
செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரத்தில் உள்ள கிக்ஸ் ஆண்ட் பஞ்சஜ் கராத்தே அகடாமி ஒவ்வொரு ஆண்டு கராத்தே வீரர்களின் திறமைகளை வெளி கொண்டு வரும் வகையில் மாநிலம் மற்றும் சர்வதேச அளவிலான கராத்தே போட்டிகள் பங்கேற்று வருகின்றனர்

அந்த வகையில் இந்தாண்டு பெங்களூரில் நடைபெற்ற மாநில அளவிலான கராத்தே போட்டியில் ரென்ஷி கார்த்திகேயேன் மற்றும் ரென்ஷி வனிதா ஆகியோர் தலைமையில் கிக்ஸ் ஆண்ட் பஞ்சஸ் காரத்தே அகடாமி சார்பில் சுமார் ஐந்து மாணவர்கள் பங்கேற்றனர் இந்தியாவிலிருந்து பல்வேறு மாநிலங்களில் இருந்து 500க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

கராத்தே போட்டி பல்வேறு பிரிவுகளில் தனி தனியாக போட்டிகள் நடத்தப்பட்டது. ஒவ்வொரு பிரிவுகளிலும் வீரர்கள் தங்களது தனி திறமையை வெளிப்படுத்தி போட்டியில் தாம்பரத்தில் உள்ள கிக்ஸ் ஆண்ட் பஞ்சஜ் கராத்தே அகடாமி சார்பில் கலந்துகொண்ட சஞ்சய் ஷிவ், கவின், நிவேதியன், சர்வேஷ், ஸ்ரீதர் ஆகியோர் வெற்றி பெற்று சான்றிதழ்கள் தங்க பதக்கங்களை பெற்றுள்ளனர் இதில் ரென்ஷி கார்த்திகேயேன் மற்றும் ரென்ஷி வனிதா ஆகியோர் அவர்களின் அலுவலகத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் தங்கப் பதக்கங்களை வழங்கினார்கள்

## சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று

# 47 பயனாளிகளுக்கு ரூ.67.60 இலட்சம் மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் / பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்






தேனி, ஆக.16-
தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ரஞ்ஜீத்சிங் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல்துறை படைப்பிரிவுகளை பார்வையிட்டு. அணிவகுப்பு மரியாதையை ஏற்று, சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து, 47 பயனாளிகளுக்கு ரூ.67.60 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், தன்னார்வ நிறுவனங்களுக்கு கேடயங்களையும், மற்றும் சிறப்பாக பணியாற்றிய அரசு அலுவலர்கள்/ பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து சிறப்பாக பணியாற்றிய 16 நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு கேடயங்களையும், சிறப்பாக பணிபுரிந்த காவல்துறை, நீதித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த மொத்தம் 238 அலுவலர்கள் / பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், ரூ.1,92,200/ மதிப்பிலான நவீன செயற்கை கால் 01 மாற்றுத்திறனாளிக்கும், ரூ.6,359/ மதிப்பிலான தையல் இயந்திரம் 01 மாற்றுத்திறனாளிக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து தொழிற்கல்வி உதவித்தொகையாக ரூ.50,000/ ஒரு நபருக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தலா ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் (2025-2026) திட்டத்திற்கான ஆணை 05 நபர்களுக்கும், தாட்கோ சார்பில் தொழிற் தொடங்க தலா ரூ.1,00,000/ வீதம் 3 நபர்களுக்கும் மாவட்ட தொழில் மையம் சார்பில் 03 நபர்களுக்கு ரூ.16,50,000/ கடனுதவியும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.6,700/ மதிப்பிலான தேய்ப்பு பெட்டி 05 நபர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.6,690/ மதிப்பிலான தையல் இயந்திரம் 02 நபர்களுக்கும்,

வேளாண்மைத் துறையின் சார்பில் ரூ.1,61,660/ மதிப்பீட்டில் சொட்டுநீர் பாசனம் அமைக்க 01 நபருக்கு பணி ஆணையும், வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ரூ.2,26,840/ மதிப்பிலான பவர் டில்லர் இயந்திரம் 01 நபருக்கும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.87,600/ மதிப்பீட்டில் வெங்காய சேமிப்புக்கூடம் அமைப்பதற்கான ஆணை மற்றும் பழச்செடி தொகுப்பு 02 நபர்களுக்கும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 02 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.13,25,000/ கடனுதவியும், சத்துணவுத்துறையின் சார்பில் 02 நபர்களுக்கு சத்துணவு அமைப்பாளர் பணி நியமனம் ஆணையினையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் கல்வி உதவித்தொகையாக 11 நபர்களுக்கு ரூ.1,14,000/ உதவித்தொகையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம் சார்பில்) சமுதாய முதலீட்டு நிதியாக 07 நபர்களுக்கு ரூ.10,50,000/ கடனுதவியும் என மொத்தம் 47 பயனாளிகளுக்கு ரூ.67,60,539/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர், லிட்டில் பிளவர் நர்சரி மற்றும் ஆரம்பப் பள்ளி. ஆண்டிபட்டி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி, ஆ.ரா.அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கம்பம். இசட்.கே.எம். மேல்நிலைப் பள்ளி, போடிநாயக்கனூர், தேனி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட சமூகநீதி விடுதி மாணவிகள் என 370க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு, கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட மாணவ, மாணவியர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஐ.மகாலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி அபிதா ஹனிப், பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.ரஜத்பீடன், இ.ஆ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு.ஜெரால்டு அலெக்சாண்டர், திரு.கலைக்கதிரவன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முத்துமாதவன், உதவி இயக்குநர்கள் (பேரூராட்சிகள்) திரு.கிறிஸ்டோபர்தாஸ், திரு.கிருஷ்ணமோகன் (கனிமவளம்), மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திருமதி சாந்தாமணி, தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி நிர்மலா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திருமதி சாந்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி மாரிசெல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி சம்பூர்ணம், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி சியாமளாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி காமாட்சி, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திரு.செய்யதுமுகமது, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி ரேவதி மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்துத்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இ.சி.ஈ. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் தலைமையில் 79 வது சுதந்திர தின விழா

தென்காசி, ஆக.16-

தென்காசி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இ.சி.ஈ. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற 79 வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டார்கள். சிறப்பாகப் பணியாற்றிய பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என 342 நபர்களுக்கு நற்சான்றிதழ்களை தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ். அரவிந்த் அவர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பழனிநாடார் அவர்கள், தென்காசி சார் ஆட்சியர் திருமதி வைஷ்ணவி பால், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள். சுதந்திரப் போராட்ட தியாகி திரு.கி.லெட்சுமிகாந்தன் பாரதி இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கௌரவித்தார்கள்.

தென்காசி மாவட்ட வாத்திய இசைக்குழு முதல்நிலைக் காவலர் திரு.எம்.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் வாத்திய இசைக்குழுவினர் முன்நின்று அழைத்துச்செல்ல காவல் ஆய்வாளர் திரு.மார்ட்டின் அவர்கள் தலைமை தாங்கி நடத்திய காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டு புறாக்களை பறக்க விட்டு மூவர்ண பலூனினை பறக்க செய்தார்கள். அதனைத் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இவ்விழாவில், சிறப்பாக பணியாற்றியமைக்காக தென்காசி காவல் துறை சார்பில் 43 காவலர்களுக்கும், தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறையின் 06 அலுவலக பணியாளர்களுக்கும், வனத்துறை சார்பில் 01 வன அலுவலருக்கும் சிறப்பாக பணிபுரிந்த மாவட்ட அளவிலான 10 அலுவலர்களுக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் 74 அலுவலக பணியாளர்களுக்கும், தமிழ்நாடு நில அளவை பதிவேடுகள் துறையின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், தாட்கோ அலுவலகத்தின் 02 அலுவலக பணியாளர்களுக்கும், ஊரகவளர்ச்சி மற்றும் ஊள்ளாட்சித்துறையின் 65 அலுவலக பணியாளர்களுக்கும், மாவட்ட குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலகத்தின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 09 அலுவலக பணியாளர்களுக்கும், பேரூராட்சிகள் துறையின் 08 அலுவலக பணியாளர்களுக்கும், கருவூலம் மற்றும் கணக்குத்துறையின் 04 அலுவலக பணியாளர்களுக்கும், வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறையின் 12 அலுவலக பணியாளர்களுக்கும், வேளாண் வணிகத்துறையின் 04 அலுவலக பணியாளர்களுக்கும், வேளாண் அறிவியல் மையத்தின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், கூட்டுறவுத்துறையின் (பொது விநியோகத்திட்டம்) 06 அலுவலக பணியாளர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், கால்நடை பராமரிப்புத்துறையின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், பொது சுகாதாரம் மற்றும்



நோய்த்தடுப்பு மருந்துத் துறையின் 16 பணியாளர்களுக்கும், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் துறையின் 27 பணியாளர்களுக்கும், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையின் 05 அலுவலக பணியாளர்களுக்கும், நம்பிக்கை மையத்தின் (எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம்) 03 அலுவலக பணியாளர் களுக்கும், EMRI GREEN HEALTH SERVICES 108 ஆம்புலன்ஸ் சேவையின் 03 பணியாளர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறையின் 04 அலுவலர்களுக்கும் கல்லூரிக்கல்வித்துறையின் 03 அலுவலர்களுக்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 04 அலுவலக பணியாளர்களுக்கும், தொழிலாளர் துறையின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் 01 அலுவலக பணியாளருக்கும், நீர்வளத்துறையின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், பால்வளத்துறையின் 02 அலுவலக பணியாளர்களுக்கும்,

செய்தி மக்கள் தொடர்பு த்துறையின் 02 அலுவலக பணியாளர்களுக்கும், தோட்டக்கலை துறையின் 04 அலுவலக பணியாளர்களுக்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், குற்ற வழக்கு தொடர்புத்துறையின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், பொதுப்பணித்துறையின் 03 அலுவலக பணியாளர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலக ஈப்பு ஓட்டுநர் 01 பணியாளர் என மொத்தம் 348 நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், பசுமை முதன்மையாளர் விருதுகளை திரு.எஸ்.முருகன் நிலை I , திரு.எஸ்.மாடசாமி நிலை II ஆகியோருக்கும், மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த தடகளப் போட்டியாளர்கள் பொன்னம்மாள், சுப்புலெட்சுமி, கவிதா, ஸ்டீபன் மற்றும் பளுதூக்குதல் போட்டியாளர்கள் முகம்மது அபுபக்கர், முகம்மது அலி ரியாஸ் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தும், 2024 2025 ஆம் ஆண்டில் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் வழங்குவதில் சிறப்பாகச் செயல்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு சிறந்த வங்கிக்கான விருதினையும், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஹச்.. எப்.சி வங்கி, இந்தியன் வங்கி ஆகிய வங்கிகளுக்குசிறந்த வங்கிக்கிளைகளுக்கான விருதுகளையும், மாண்புமிகு முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு திட்டம், ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திதி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ் சிறந்த மருத்துவமனைக்கான விருதுகளை தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கும், தென்காசி மீரான் மருத்துவமனைக்கும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சிறந்த நடைமுறை விருது மற்றும் சான்றிதழை கால்நடை உதவி மருத்துவர் சு.ரமாதேவி அவர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.6,359/ வீதம் ரூ.12,715 மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களையும், தொழிலாளர் துறையின் (சமூக பாதுகாப்புத்திட்டம்) மூலம் 02 பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/ வீதம் ரூ.1,00,000/ உதவித்தொகைக்கான காசோலைகளையும், 02 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000/ வீதம் ரூ40,000/ திருமண உதவித்தொகைக்கான காசோலைகளையும், 01 பயனாளிக்கு ரூ.55,000/ இயற்கை மரண நிதியுதவிக்கான காசோலைகளையும், மிகவும் பிற்படுத்தப்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் இலவச தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 05 பயனாளிகளுக்கு தலா ரூ.4000/ வீதம் ரூ.20,000/ மதிப்பிலான இலவச தேய்ப்பு பெட்டி களையும், மாவட்ட தொழில்மையம் மூலம் 01 பயனாளிக்கு (சுற்றுலா வாகனம்) ரூ.3.11 இலட்சத்திற்கான கடனுதவித்தொகையினையும், 01 பயனாளிக்கு(லோடு வாகனம்) ரூ.04.05 இலட்சத்திற்கான கடனுதவித்தொகையினையும், தாட்கோவின் மூலம் 01 பயனாளிக்கு (சுற்றுலா வாகனம்) ரூ.3.26 இலட்சத்திற்கான கடனுதவித்தொகையினையும், 01 பயனாளிக்கு (சுற்றுலா வாகனம்) ரூ.3.39 இலட்சத்திற்கான கடனுதவித்தொகையினையும், 01 பயனாளிக்கு (பயணிகள் ஆட்டோ வாகனம்) ரூ.1.41 இலட்சத்திற்கான கடனுதவித்தொகையினையும், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு தலா ரூ.6,690/ வீதம் ரூ.66,900/ மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களையும் என மொத்தம் 27 பயனாளிகளுக்கு ரூ.18.17 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர் இ.ஆ..ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவியர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற முதல் மூன்று பள்ளிகளுக்கு கேடயமும், மற்ற பள்ளிகளுக்கு நினைவுப்பரிசினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், தென்காசி நகராட்சிக்குட்பட்ட வடக்குரதவீதியில் உள்ள காந்திசிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இவ்விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தண்டபாணி, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. கவிதா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி.மதி இந்திரா பிரியதர்ஷினி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.சு.தமிழ்ச்செல்விபோஸ், செய்திமக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஏ.எடிசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(செய்தி) திரு.ரா. ராமசுப்பிரமணியன் மற்றும் அரசுஅலுவலர்கள், காவல் துறையினர், பள்ளி மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

79வது சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்று,

## பொதுமக்கள் முழுஅளவில் கலந்து கொண்டு தங்கள் ஊராட்சிக்கு தேவையான திட்டங்களை முன்மொழிந்து பயன்பெற வேண்டும்

மாவட்ட ஆட்சித்தலைவர் .சிம்ரன்ஜீத் சிங் காலோன் வேண்டுகோள்

இராமநாதபுரம், ஆக.16-

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியம், அ.புத்தூர் ஊராட்சியில் 79வது சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் பங்கேற்று, ஊராட் சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்து தெரிவிக்கையில், கிராம சபைக் கூட்டத்தின் நோக்கம் ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை பொதுமக்கள் ஒன்று கூடி கலந்து ஆலோசித்து தீர்மா னங்களை நிறைவேற்றுவதாகும். அந்த வகையில் இன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டம் போல் ஒவ்வொரு கிராம சபை கூட்டத்திலும் ஊர் பொதுமக்கள் முழுளவில் கலந்து கொண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் தேவை யான பணிகளை தேர்வு செய்து தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றி திட்டங்களை செயல் படுத்திட வேண்டும். கிராம சபையில் முன்மொழியும் ஒவ்வொரு திட்டமும் வலுசேர்க்கக்கூடிய ஒன்றாகும். அது மட்டுமின்றி தனிநபர் பொருளாதார முன்னேற்றத்திற்கும் கிராம சபைக்கூட்டம் பயனுள்ளதாக அமையும். எனவே அனைவரும் இதுபோன்ற கிராம சபை கூட்டங்களில் பங்கேற்று



பயன்பெற வேண்டும்.

மேலும் இன்று பொதுமக்களின் முக்கிய கோரிக்கையாக தெரிவித்த கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல் பேவர் சாலை அமைக்க கேட்டுக் கொண்டதற்கிணங்க, தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் தடையின்றி மின்சாரம் கிடைத்திட கூடுதல் மின்மாற்றி அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பாசன கண்மாயின் உள்பகுதியில் உயர் அழுத்த மின்சார வயர் தாழ்வாக செல்வதை தெரிவித்ததையொட்டி, ஒருவார காலத்திற்குள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இப்பகுதியில் தடையின்றி முழுமையாக குடிநீர் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அதுவும் விரைவில் சரி செய்யப்படும். பொதுமக்கள் அரசின் திட்டங்களை தெரிந்து பயன்பெறும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், கலைஞரின் கனவு இல்லம், முதலமைச்சரின் விரிவான சாலை திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்துவதுடன் அரசு பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து உயர்கல்வி செல்ல உள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. அதுமட்டுமின்றி மாணவர்கள் உயர்கல்வி பெறவும் வேலைவாய்ப்பு பெறவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் திட்டங்களை பெற்று பயன் பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

தொடர்ந்து வேளாண் மைத்துறை, தோட்டக்கலைத்துறையின் மூலம் பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திரு.பாபு அவர்கள், பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ஞா. சரவண பெருமாள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.பத்மநாபன் அவர்கள், பரமக்குடி வட்டாட்சியர் திரு.வரதன் அவர்கள், போகலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.திருநாவுக்கரசு அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ சுதந்திர தின விழாவிழா முன்னிட்டு மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் அருள்மிகு மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி.ருக்மணி பழனிவேல்ராஜன் அவாகள், மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் இ.ஆ.ப., அவர்கள், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.தளபதி அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு.நாகராஜன் அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு உணவு அருந்தினார்கள்.




■ மதுரை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் தேசியகொடியை ஏற்றி வைத்து காவல்துறை அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.கே.அர்விந்த் இ.கா.ப., அவர்கள் அவர்கள் உடன் உள்ளார்.



■ சுதந்திர தினவிழாவை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் தேவசேரி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.வெங்கடேசன் அவர்கள் மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட அலுவலர் திரு.வானதி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியம் சிவசைலம் ஊராட்சியில் 79வது சுதந்திரதின விழாவினை முன்னிட்டு

## ஊராட்சிமன்ற தலைவர் இரா.மலர்மதி தலைமையில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் கலந்து கொண்டார்

தென்காசி, ஆக.16-

தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியம் சிவசைலம் ஊராட்சியில் 79வது சுதந்திரதின விழாவினை முன்னிட்டு ஊராட்சிமன்ற தலைவர் திருமதி இரா.மலர்மதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்ததாவது,

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல் மற்றும் கிராம ஊராட்சியின் கடந்த ஆண்டு தணிக்கை அறிக்கை மற்றும் தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II, ஜல்ஜீவன் இயக்கம் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்தார். இக்கிராம சபைக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில், உதவி இயக்குநர் ஊராட்சிகள் விஷாலி, கடையம் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி மு.செல்லம்மாள், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திருமதி ச.கனகம்மாள், வேணாண்மை உதவி இயக்குநர் (கடையம்) திருமதி பா.ஏஸ்சலின் பொன்ராணி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஏ.எடிசன் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ இந்திய திருநாட்டின் 79வது சுதந்திர தின விழா சிவகங்கை மாவட்டம் கல்லல் தேவப்பட்டில் அமைந்துள்ள கல்யாணி கிரீன் பார்க் மெட்ரிகுலேஷன் பள்ளியில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது விழாவில் பள்ளியின் சேர்மன் KR.அசோகன் அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்தார்கள் உடன் பள்ளியின் முதல்வர் பிரதீபா பள்ளி நிறுவனர் கல்யாணி போஸ் ஆசிரியை, ஆசிரியர்கள் அலுவலக அலுவலர்கள் மாணவ, மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் பரதம் நடனம் சிலம்பம் பேச்சுப்போட்டி போன்ற பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது மேலும் குறுவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகளில் 14வயதுக்குட்பட்ட சதுரங்கம் போட்டியில் சத்யதேவ் 2ம் இடம், எழிலரசன் 3ம்இடம், உயரம் தாண்டுதல் தேவதர்ஷன் 2ம் இடம், கேரம் போட்டியில் வசீகரன் முதல் இடம், நித்யா ஸ்ரீ, வித்யா ஸ்ரீ 2ம் இடம் பெற்றனர் அவர்களுக்கும் பள்ளி சார்பில் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டது.



# கீழக்கோட்டையில் தேசத் தலைவர்களின் முகமூடி அணிந்து 79-வது சுதந்திர தினப் பெருவிழா கொண்டாட்டம்

காளையார் கோவில், ஆக.16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 79 ஆவது சுதந்திர தினப் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அறிவியல் பட்டதாரி ஆசிரியர் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்து தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை யாற்றினார். பள்ளி மேலாண்மை குழு தலைவி நித்யா முன்னிலை வகித்தார். ஆலவிலாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை ஜெபமாலைமேரி கிராம நிர்வாக அலுவலர் அருள்சாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக நூற்றுக்கு மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கு தேச தலைவர்கள் காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், வ. உ. சிதம்பரனார், பாரதியார், வேலுநாச்சியார் ஆகியோரின் முகமூடி வழங்கப்பட்டு தேச தலைவர்களின் தியாகம் மிகுந்த வாழ்க்கை வரலாறு விளக்கப்பட்டது. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. மாணவிகள் ஜோதிகா விண்ணரசி சுதந்திர தின உரையாற்றினர். மாணவர்கள் தருண் ஞானீஸ்வரன் அஜய் கவிதை வாசித்தார்கள். மாணவிகள் தன்ஷிகா நந்திகா யோகா செய்து அனைவரது பாராட்டுகளையும் பெற்றனர். கணித பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியர்கள் மீனாட்சி வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் சத்யா செல்வி பழைய மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்.




## தாராபுரத்தில் காங்கிரஸ் கட்சியினர் இரவில் தீப்பந்த ஊர்வலம் ஷ தேர்தல் ஆணையம், மோடி அரசு மீது கடும் கண்டனம்

திருப்பூர், ஆக.16-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் காங்கிரஸ் கட்சியின் திருப்பூர் தெற்கு மாவட்டம் சார்பில், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் தென்னரசு தலைமையிலும், முன்னாள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் கே. எஸ். காளிமுத்து முன்னிலையிலும், இரவு தீப்பந்த ஊர்வலம் நடைபெற்றது.

கைகளில் தீ பந்தம் ஏந்தி, தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளையும், மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசின் கொள்கைகளையும் கடுமையாக கண்டித்து, ஊர்வலம் நடத்தப்பட்டது. இந்த பேரணி பொள்ளாச்சி சாலை கனரா வங்கி கிளை அருகில் தொடங்கி, பூக்கடைக்காரர், பெரிய கடைவீதி, சர்ச் சாலை வழியாக, பழைய நகராட்சி அலுவலகம் அருகிலுள்ள காந்தி சிலை முன்பு நிறைவுற்றது.

ஊர்வலத்தின் போது, தேர்தல் ஆணையம் பாஜக அரசுக்கு சாதகமாக செயல்படுவதாகவும், மக்களாட்சியை சீரழிக்கிறதாகவும் கோஷங்கள் எழுப்பினர்.

"பாஜக அரசு தேர்தல் ஆணையத்தை அரசியல் கருவியாக பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளை ஒடுக்கி வருகிறது. மக்களின் சுதந்திர குரலை மௌனம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது," என காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் தெரிவித்தனர். இதில் தாராபுரம், மூலனூர், குண்டடம், உடுமலைப் பேட்டை, மடத்துக்குளம் உள்ளிட்ட சட்டமன்ற மற்றும் ஒன்றிய பகுதிகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட காங்கிரஸ் ஆர் தீப்பந்த பேரணி ஆர்ப்பாட்டத்தில்

## காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் 79வது சுதந்திர தினவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

காரைக்குடி, ஆக.16-

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் 79வது சுதந்திர தினவிழா சிறப்பாகக் கொண்டாட ப்பட்டது. பல்கலைக்கழக துணை வேந்தர் மதிப்புறு கர்னல் பேரா. க. ரவி அவர்கள் மூவர்ணக்கொடியை ஏற்றிவைத்து பல்கலைக்கழக தேசிய மாணவர் படை பிரிவினர் மற்றும் மாணவ, மாணவியர் அளித்த அணி வகுப்பு மரியா தையை ஏற்றுக் கொண்டு சுதந்திர தின விழா உரை நிகழ்த்தினார்.

அவர் தனது சுதந்திர தின உரையில் நாட்டின் சுதந்திரத்திற்காக தியாகம் செய்த சுதந்திர போராட்ட வீரர்களின் வீரத்தையும் மற்றும் தன்னலமற்ற சேவையையும் நினைவுகூ ர்ந்தார். அவர்களுடைய கனவுகளை நினைவாக் குவதே நமது கடமை என்றார். "இந்தியா வரும் ஆண்டுகளில் அனைத்து துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியை எட்டத் தயராக இருப்பதாகவும், இந்த நிலையில் நம் நாட்டில் இளைஞர்களுக்கு பல்வேறு வாய்ப்புகள் நிறைந்து இருக்கிறது என்றும், அவற்றை இளைஞர்கள் கண்டறிந்து அவர்களின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்". வாழ்க்கையில் முன்னேறு வதற்கு திறன் அவசியம். இளைஞர்களின் திறன்களை வளர்ப்பதற்கு மாநில மற்றும் மத்திய அரசுகள் பல்வேறு செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. அவற்றை தீவிரமாக கண்டறிந்து பயனடையவேண்டும் என்று அறிவுருத்திருனார். மேலும் அவர் பேசுகையில் "திறன் மற்றும் கடின உழைப்பு மட்டுமே உங்கள் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும்" என்றாலீர். ஒவ்வொரு இளைஞரும் இதை எப்போதும் மனதில் கொண்டு வாழ்க்கையில் உயர்ந்த இலக்குகளை அடைய தொய்வில்லாமல் முயற்சித்து வெற்றிபெற வேண்டும் என்றார்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக பல்கலைக் கழகத்தில் 25 ஆண்டுமகள் பணிபுரிந்த நிர்வாக பணியாளர் திரு.ஏ.எல். நடராஜன் மற்றும் முனைவர் பட்டம் பெற்ற நிர்வாக பணியாளர்கள் திரு.எம். அழகுராஜா, திருமதி.எம். சங்கீதவித்யா மற்றும் ஐ.சேவியர் ஜெயக்குமார் ஆகியோர்களுக்கு துணைவேந்தர் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேரா. வெ.பழனிச்சாமி, பேரா.சி.சேகர், பேரா.சு. ராஜாராம், பேரா.ஜெ.ஜெயகாந்தன், பதிவாளர் முனைவர்.அ.செந்தில் ராஜன், தேர்வாணையர் முனைவர் எம்.ஜோதிபாசு, நிதி அலுவலர் பேரா.சி.வேதிராஜன், தொலைதூரக் கல்வி இயக்குநர் பேரா.எ.கண்ணபிரான், புல முதன்மையர்கள், இயக்குன ர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள்; மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

உடற்கல்வியியல் கல்லூரி பேராசிரியர்கள் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சிகளை பல்கலைக்கழக தேசிய மாணவர் படை அதிகாரி லெப். வைரவசுந்தரம் தொகுத்து வழங்கினார்.





### தாம்பரம் ஜும் ஆ பள்ளிவாசலில் நாட்டின் 79வது சுதந்திர தினத்தையொட்டி கொடியேற்றி மாணவ, மாணவிகளுக்கு மாமன்ற உறுப்பினர் எம்.யாக்கூப் கல்வி உதவி தொகைகளை வழங்கினார்

தாம்பரம், ஆக்.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சண்முகம் சாலையில் உள்ள ஜும்ஆ பள்ளிவாசலில் 79வது சுதந்திர தின விழா இன்று வெகு சிறப்பாக நடைப்பெற்றது. நிகழ்ச்சியில் தாம்பரம் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் நாகூர் கனி தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு விருந்தினராக மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணை பொதுசெயலாளரும், தாம்பரம் மாநகராட்சியின் 50வது மாமன்ற உறுப்பினருமான எம்.யாக்கூப் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

தொடர்ந்து 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவி தொகை மற்றும் பரிசுகள் வழங்கி பாராட்டினர்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாமன்ற உறுப்பினர் தாம்பரம் யாக்கூப் கூறுகையில், வாக்காளர் அடையாள அட்டை முறைகேட்டை வெளிகொண்டு வந்த ராகுல்காந்திக்கு நன்றி தெரிவிப்பதாகவும், முறைகேட்டில் ஈடுபட்ட தேர்தல் ஆணையத்தை கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் தூய்மை பணியாளர்களின் நியாமான கோரிக்கைகளுக்கு தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

### மாநில கல்விக் கொள்கையின்படி பாடத்திட்டத்தை மேம்படுத்த



சென்னை, ஆக.16-

மாநில கல்விக் கொள்கையின் படி முறையான கால அட்டவணை அமைத்து, பாடத்திட்டங்களை மேம்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவுறுத்தினார்.

பள்ளிக்கல்வித் துறையின் அலுவல் ஆய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமை வகித்தார். துறை செயலர் சந்திரமோகன், இயக்குநர் கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் நரேஷ் மற்றும் துறை சார்ந்த இயக்குநர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவையில் பள்ளிக்கல்வித் துறை தொடர்பாக வெளியான அறிவிப்புகளின் நிலை, செயல்படுத்த வேண்டிய திட்டங்கள், துறையின் எதிர்கால இலக்குகள் உள்ளிட்டவை குறித்து இதில் விவாதிக்கப்பட்டன. அதை தொடர்ந்து, 'தற்போது வெளியிடப்பட்டுள்ள மாநில கல்விக் கொள்கையில் இடம் பெற்றுள்ள அம்சங்களை அமல்படுத்துவதற்கான செயல் திட்டங்களை வகுக்க வேண்டும்.

பாடத் திட்டங்களை மேம்படுத்த கால அட்டவணை தயாரித்து பணியாற்ற வேண்டும்' என்பன உட்பட பல அறிவுறுத்தல்களை அமைச்சர் அன்பில் மகேஸ் வழங்கினார். பள்ளிக்கல்வித் துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் மற்றும் ஆசிரியர் பணிக்கான போட்டித் தேர்வு குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டதாக துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.




## 79 ஆம் ஆண்டு சுதந்திர தின கொடியேற்று நிகழ்ச்சி

தாராபுரம், ஆக,16-

தாராபுரம் தொகுதி SDPI கட்சியின் சார்பில் 79ஆம் ஆண்டு சுதந்திர தின கொடியேற்று நிகழ்ச்சி தாராபுரம் அரசமரம் பகுதியில் தொகுதி தலைவர் முகம்மது இஸ்மாயில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

வரவேற்புரை U.முகம்மது இர்ஃபான் தாராபுரம் தொகுதி செயலாளர் முன்னிலை H.முகமது இலியாஸ் திருப்பூர் தெற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் M.சையது அபுதாஹிர் தாராபுரம் நகர தலைவர் மற்றும் தொகுதி நகர வார்டு நிர்வாகிகள் சிறப்பு விருந்தினர்கள் J.இம்மானுவேல் பவுல் CSI எல்லிஸ் மெமோரியல் சர்ச் தாராபுரம் S.அப்துல் காதர் தாவூதி ஆசிரியர் தஜ்வீதுல் குர்ஆன் மக்தப் மதரஸா முகமது உசேன் Adv.தாராபுரம் முகம்மது மக்தூம் தாவூதி தாராபுரம் பேருந்து நிலையம் தலைமை இமாம் கொடியேற்றி சிறப்புரை J.சையது அபுதாஹிர் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் நன்றியுரை M.மன்சூர் அலி தாராபுரம் நகர செயலாளர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசுகள் வழங்கி கௌரவிக் கப்பட்டது

இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் கட்சியின் செயல்வீரர்கள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்



## காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் சார்பில் தேசப் பிரிவினை பெருந்துயர் நினைவுதினம்

காரைக்குடி, ஆக.16-

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் சார்பில் தேசப் பிரிவினை பெருந்துயர் நினைவுதினம் பல்கலைக்கழக வீறுகவியரசர் முடியரசனார் அரங்கில் நடைபெற்றது.

அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.க.ரவி அவர்கள் இந்நிகழ்விற்கு தலைமையேற்று உரைநிகழ்த்தினார். அவர் தமது உரையில், 1947ஆம் ஆண்டு நாடு பிரிவினையின் போது ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் நமது நாடு சுதந்திரம் அடைய இன்னுயிரை தியாகம் செய்த சுதந்திரப்போராட்ட வீரர்கள் மற்றும் சுதந்திர போரட்ட தலைவர்கள் குறித்தும் எடுத்துரைத்தார். இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் உள்ள நமது வரலாற்றுச் சின்னங்கள் மறைக்கப்பட்டு வருகிறது. அவற்றை மீட்டெடுக்க நாம் முயற்சி மேற்கொள்ளவேண்டும். நமது சொந்த வரலாற்றை நாம் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். வரலாற்று மாணவர்கள் நிறைய ஆய்வுக் கட்டுரைகளை படிக்க வேண்டும். அப்போது தான் நமது உண்மையான வரலாற்றை நாம் தெரிந்துகொள்ள முடியும். நாம் போராடிப்பெற்ற சுதந்திரத்தின் மதிப்பை உணரமுடியும். தேசப்பற்று ஒவ்வொருவருடத்திலும்; மேலோங்கி இருக்க வேண்டும். அப்போது தான் நாடு வளர்ச்சி சிறந்த வளர்ச்சி பெறமுடியும் என்றார்.

இந்நிகழ்வில் அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் மற்றும் கலைப்புல முதன்மையர் பேரா.சு. ராசாராம் வாழ்த்துரை வழங்கினார். அண்ணாமலை பல்கலைக்கழக வரலாற்றுத் துறை மேனாள் பேராசிரியை கே.சங்கரி சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் தேசப்பிரிவினையால் மக்கள் அனுபவித்த கடும் துயரங்கள் உயிரழந் தவர்களின் தியாகங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

முன்னதாக வரலாற்றுத் துறைத்தலைவர் (பொ) பேரா.கே.கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையாற்றினார். உதவி பேராசிரியர் முனைவர் க.பரந்தாமன் நன்றி கூறினார். உதவி ஆசிரியர் முனைவர் ஆர்.ஷிரின் பர்காணா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். வரலாற்றுத் துறை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161